# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ

**அதி விசேஷமானது**

අංක 2044/27 - 2017 නොවැම්බර් මස 08 වැනි බදාදා - 2017.11.08

***2044/27 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்***

*64 (2) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்*

இலக்கம் 7 – காலி தேர்தல் மாவட்டத்திற்கு 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி கீதா சமன்மலீ குமாரசிங்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 66 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 91(1) ஈ (xiii) ஆம் உறுப்புரைக் கமைய, பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பாராளுமன்றத்தில் அமர்வதற்கோ பாராளு மன்றத்தில் வாக்களிப்பதற்கோ தகைமையற்றவரென மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட CA/362/2015 ஆம் இலக்க எழுத்தாணை விண்ணப்பத்திற்கு அளிக்கப்பட்ட தீர்ப்புக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டை கவனத்திற்கொண்டு உயர் நீதிமன்றத்தினாலும் அதன் S.C. Appeal No. 99/ 2017 ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் மூலம் மேன்முறை யீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை உறுதிப்படுத்தி மேன்முறையீட்டு மனுவை நிராகரித்துள்ளதன் காரணமாக எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவரின் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளமையாலும்,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய இவ்வெற்றிடத்தை நிரப்புமாறு இவ்வுறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(1) ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளமையாலும்,

தெரிவத்தாட்சி அலுவலர் அச்சட்டத்தின் 64(2) ஆம் பிரிவின் கீழ் செயலாற்றி அத்தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினரொருவராக திரு. இஹல மெதகம கமகே பியசேன தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென வெளிப்படுத்தி, அச்சட்டத்தின் முதலாம் அட்டவணையின் “க” படிவத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

அந்த சட்டத்தின் 64(2) ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய செயற்பட்டு மேற் கூறப்பட்ட மேன்முறையீட்டு வழக்குத் தீர்ப்பின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக இல. 7 – காலி தேர்தல் மாவட்டத்திற்கு எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக திரு. இஹல மெதகம கமகே பியசேன தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென தேர்தல் ஆணைக்குழு இத்தால் வெளிப்படுத்துகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2017, நவெம்பர் 08.

11- 1054

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.